(ஐ) மின்னணு உற்பத்தி தொகுப்பு மண்டலங்கள் அமைத்தல் மற்றும் "இணைய பாதுகாப்புக் கொள்கை" வெளியிடுதல் குறித்த தகவல் தொழில்நுட்பவியல் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், 30 விழுக்காடு பங்களிப்பை அளித்து நாட்டின் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை இத்துறையின்மூலம் தமிழ்நாடு செய்துள்ளதாக இந்திய மின்னணு தொழிற்சாலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், இத்துறை சுமார் 40 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கி வருகிறது. தகவல் தொழில்நுட்பத் துறைக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து பின்வரும் அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்:

1. உலகெங்கும் உள்ள மின்னணு உற்பத்தித் தொழில்களின் முதலீட்டை தமிழ்நாட்டில் ஈர்க்கும் விதமாக, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் 4 இடங்களில் மின்னணு உற்பத்தி தொகுப்பு மண்டலங்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைக்கும்.

2. பொது மக்கள் இணைய வழியில் பாதுகாப்பான பணப் பரிமாற்றம் செய்யவும், பல்வேறு தரப்பிலிருந்து தொடுக்கப்படும் இணையவழி தாக்குதல்களை எதிர்கொள்ளவும், பொது மற்றும் தனியார் தரவு உட்கட்டமைப்புகளைப் பாதுகாத்திடவும் வழிவகை செய்யும் "இணைய பாதுகாப்புக் கொள்கை" வெளியிடப்படும்.

(ஒ) மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்குதல், சென்னை, சேப்பாக்கம் 'எழிலகம்' வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுதல், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்துதல், "தமிழ் நிலம்" மென்பொருள் உருவாக்குதல் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்: